Adhivivasayi

Dr. A. Praba
Honorable Lecturer, Tamil Arts Research Institute
South Thiruvithangoor Hindu College, Nagercoil

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

DOI:
https://doi.org/10.5281/zenodo.17346628

Abstract
As a primitive society, ethnic groups around the world have been classified on the basis of clans in Tamil Nadu. The lifestyles are arranged in an ascending order from hunter to hunter. Nomadic humans lived in caves. They made their homes in mountain caves, rock crevices, and tree holes. They express the lifestyle of primitive humans through their rock paintings. In the rock paintings, the method of hunting, the tools used for hunting, the customs and rituals of the people are revealed through these paintings. During the time when the society was a hunting society, women also went hunting like men. During the fertile period, they rest. At that time, they eat a lot of fruits. They throw the seeds of those fruits in the backyard. In this way, they see the seeds that fall into the soil and germinate and sprout in the rain. Then they sow the seeds in the soil and make them sprout. Thus, the woman becomes the primitive farmer. The female-led society was created. The goddess who is worshipped as a female deity is the goddess Kotravai. A matriarchal society emerged. Later, as the use of animals and the use of the plough were given importance in tillage, the contribution of women was less. When the excessive work of men is revealed, the leadership of women begins to decrease.
Keywords: *Chulayutham, Sirur, Paditud, Thudiya, Panan, Kadamban, Kudamuzha*

References
1. Subramanian, B. – Purananuru (Original Text and Commentary), New Century Book House (P) Ltd., 41 BIDC Industrial Estate, Ambattur, Chennai. First Edition, 2004.
2. Subramanian, B. – Paripadal (Original Text and Commentary), New Century Book House (P) Ltd., 41 BIDC Industrial Estate, Ambattur, Chennai. First Edition, 2004.
3. Nagarajan, V. – Kurunthogai (Original Text and Commentary), New Century Book House (P) Ltd., 41 BIDC Industrial Estate, Ambattur, Chennai. First Edition, 2004.
4. Viswanathan, A. – Kalithogai (Original Text and Commentary), New Century Book House (P) Ltd., 41 BIDC Industrial Estate, Ambattur, Chennai. First Edition, 2004.
5. Dhananjeyan, A. – Tamil Literary Anthropology, World Tamil Scholars Association, Second Main Road, Central Technical Training Complex, Taramani, Chennai. First Edition, 2011.
6. Devaneya Paavanar. – Ancient Tamil Civilization and Culture, Nesephaka Publications, 32 Krishna Street, Pandibazaar, Chennai.
7. Bhaktavatsala Bharathi. – Cultural Anthropology, Neyappan Publications, 53 New Street, Chidambaram. First Edition, 1990.
8. Bhaktavatsala Bharathi. – Tamil Anthropology, T. P. Press, Maniapset, Chennai, 1205 Karpoorsalai Road, Puthanatham, Tiruchi District. Second Edition, 2008.

ஆதிவிவசாயி

முனைவர் அ. பிரபா
கௌரவ விரிவுரையாளர், தமிழ்க்கலை ஆய்வகம்
தென் திருவிதாங்கூர் இந்துக்கல்லூரி, நாகர்கோவில்

ஆய்வுச்சுருக்கம்
ஆதிச்சமுதாய அமைப்பாக உலகெங்கும் இனக்குழுக்கள் தமிழகத்தில் திணைக்குடிகளின் அடிப்படையில் பாகுப்படுத்தப்பட்டிருக்கின்றன. வேடன் முதல் வேந்தன் வரையில் ஒரு ஏறுவரிசை முகமாக வாழ்வியல் முறைகள் அமைந்துள்ளன. நாடோடிகளாக அலைந்த மனிதன் குகைகளிலும் வாழ்ந்தனர். மலைக்குகை களிலும், பாறை இடுக்குகளிலும், மரப்பொந்துகளிலும் இருப்பிடங்களை அமைத்துக் கொண்டனர். ஆதிமனிதனின் வாழ்க்கை முறையினை தங்களின் பாறை ஓவியங்களின் மூலம் வெளிப்படுத்துகின்றன. பாறை ஓவியங்களில் வேட்டையாடிய முறையும், வேட்டைக்குப் பயன்படுத்திய கருவிகள், மக்களின் பழக்கவழக்கங்கள் சடங்கு முறைகளும் இந்த ஓவியங்களின் வாயிலாக வெளிப்படுகின்றன. வேட்டை சமூகமாக இருந்த காலத்தில் ஆணுக்கு நிகராக பெண்களும் வேட்டைக்கு சென்றனர். கருவுற்ற காலங்களில் ஓய்வில் இருப்பாள். அப்போது அதிகப்படியான பழங்களை உண்கின்றாள். அப்பழங்களின் விதைகளை கொல்லைப்புறத்தில் எறிகின்றாள். அவ்வாறு மண்ணில் விழுந்து புதைந்த விதை மழையில் முளைத்து துளிர்ப்பதைக் காண்கின்றாள். பின்னர் விதைகளை மண்ணில் விதைத்து முளைக்கச் செய்கின்றாள். இவ்வாறு பெண் ஆதி விவசாயி ஆகின்றாள். பெண் வழி சமூகம் உருவாக்கப்பட்டது. பெண் தெய்வமாகப் போற்றப்படுபவள் கொற்றவை என்ற பெண் தெய்வம் ஆகும். தாய்வழி சமூகம் உருவாகியது. பின்னர் விலங்குகளின் பயன்பாடும், கலப்பையின் பயன்பாடும் உழவுத்தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதால் பெண்களின் பங்களிப்பு குறைவாகவே இருந்தன. ஆணின் அதிகப்படியான உழைப்பு வெளிப்படும் போது பெண்ணின் தலைமைப்பண்பு குறையத்தொடங்குகிறது.
திறவுச்சொற்கள்: *சூலாயுதம், சிறூர், பாதீடு, துடியன், பாணன், கடம்பன், குடமுழா*

முன்னுரை

இன்றைய காலக்கட்டத்தில் உணவுகளை சமைத்து உண்ணும் பழக்கம் காணப்படுகின்றது. அது நம் முன்னோர்களான பழந்தமிழர்களின் கண்டுபிடிப்புகள் ஆகும். ஆதிமனிதன் உணவுக்காக காடுகளில் அலைந்து இயற்கையாகக் கிடைக்கும் காய்கள், கனிகள், தாவரங்களில் சில வகைகளை பச்சையாக உண்டான். விலங்கின் இறைச்சியினை பச்சையாக உண்ட மனிதன் இயற்கையின் மாறுபாடுகளினால் ஏற்படும் தீ காடுகளில் பற்றி எரிம் போது அங்கு கிடைக்கும் கிழங்குகள், விலங்குகளின் மாமிசங்கள் நெருப்பினால் சுடப்படுகின்றன. நெருப்பு தீண்டிய உணவினை உண்டவன் அதன் சுவையினை உணர்ந்து சமைத்து உண்ணும் முறையினை கையாண்டான். இத்தகைய மாறுபாடுகளே நாகரீக வளர்ச்சியினை முன்னெடுத்துச் செல்லும் அடிக்கோலாய் அமைந்திருக்கின்றது. நாகரீக வளர்ச்சியின் அடிப்படை காரணமாக இருந்த ஆதி விவசாயினை மையமாகக் கொண்டு இக்கட்டுரையானது அமைந்துள்ளது. இனக்குழுக்கள் வழி வேளாண்மை வளர்ச்சியடைந்த நிலையினையும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

வாழ்நிலப் பரப்புவழிச் சமூகங்கள்

ஆதிச் சமுதாய அமைப்பாக உலகெங்கும் இனக்குழுக்கள் நிலவின. தமிழகத்தின்

இனக்குழுக்கள் திணைகளின் அடிப்படையில் பாகுபடுத்தப் பட்டிருக்கின்றன. சங்க முற்காலத்திலும் இனக்குழு வாழ்க்கை தமிழகத்தில்நிலவிவந்தது.சங்கபாடல்களில் மக்களின் நம்பிக்கைகள், சடங்குகள், மந்திரச் சடங்குகள், வளச்சடங்குகள், மந்திரம் - வழிபாடு ஆகிய இரண்டும் கலந்த சடங்கு, வேட்டைச்சடங்கு ஆகியவை இனக்குழு மக்கள் பின்பற்றும் முறைகளாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இனக்குழுவில் உள்ள மக்கள் மன்றம் வைத்திருந்ததாக அறியப்படுகின்றது. இனக்குழு வாழ்வில் மன்றமானது வழிபடும் இடமாகவும், நீதி வழங்கும் இடமாகவும், இனக்குழு வாழ்வின் சொத்தான ஆநிரைகளை அடைத்து வைக்கும் இடமாகவும், பொழுதுபோக்கும் இடமாகவும், எல்லாவற்றிற்கும் மேலாகக் கூட்டு வாழ்வின் சமத்துவத்தை வெளிப்படுத்தும் சின்னமாகவும் திகழ்ந்தது[4] என்பதனை தமிழில் இலக்கிய மானிடவியல் (ப. 35) என்ற நூலில் ஆ. தனஞ்செயன் கூறியுள்ளார். குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் முதலிய பரந்த நிலப்பகுதிகளில் வாழ்ந்த மக்கள், தாம் வாழ்ந்த நிலத்தின் தன்மை, செய்த தொழில் ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபட்டிருந்தனர். இத்தகைய மக்கள் சமூகத்தினரை வாழ்நிலப் பரப்புவழிச் சமூகங்கள் என்றும் அவற்றை நிலக்க ளனாகக் கொண்டே தமிழ்ச் சமுதாயம் தோன்றியது என்றும் கூறுவர். இவர்களைத் தொடர்ந்து குயவர், கொல்லர், தச்சர், கூத்தர் உள்ளிட்டவர்கள் தொழில்வழிக் குடிகள் ஆவர். இவற்றையே பழமையான தமிழ்க் குடிகள் என்றும் கூறலாம். இந்த நான்கு குடிகளையும் புறநானூற்றுப் பாடல்களில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.

துடியன் பாணன் பறையன் கடம்பன் என்று
இந்நான் கல்லது குடியும் இல்லை
(புறம். 335, 7 - 8)

எனும் வரிகள் மாங்குடி கிழார் என்னும் புலவரின் பாடலில் இடம் பெற்ற துடியன் முதலிய நான்கு குடிகளை பற்றி கூறியுள்ளார். இந்த நான்கு குடிகளுக்கும் வழங்கும் பெயர்கள் அடிப்படையில் தொழிலை ஆதாரமாகக் கொண்டே அமைந்துள்ளன. துடியை முழக்குபவன் துடியன் என்றும், பண்ணினை இசைப்பவன் பாணன் என்றும் பறையை அறைபவன் பறையன் என்றும் அழைக்கப்பட்டனர். கடம்பன் என்னும் குடிப்பெயர் குடமுழா என்னும் கருவியை அறைபவனுக்கு வழங்கிய பெயராகும். இவ்வாறு ஒவ்வொரு குடிப்பெயரும் அவனுடைய தொழிலின் மூலமாக உருவானப் பெயர்களாகும்.

இனக்குழு வாழ்வின் தோற்றம்

ஆதிமனிதன் விலங்குகளோடு விலங்குகளாய் வாழ்க்கை நடத்தினார்கள். விலங்குகளோடு போட்டிபோட்டுக்கொண்டு வெற்றிப்பெற போராடினார்கள். தாம் விலங்குகளுடனே ஏற்படும் போராட்ட வாழ்க்கையில் பல இன்னல்களையும், இழப்புகளையும் சந்திக்க நேரிட்டது. எனவே குழுவாக வாழும் நிலை தானாகவே ஏற்பட்டது. நக்கீரன் பாடிய பாடலில் அவர்காலச் சமுதாயத்தில் கீழ்நிலையிலிருந்த வேடன் முதல் மேல் நிலையிலிருந்த வேந்தன் வரையில் ஒரு சமூக ஏறுவரிசையில் அமைந்துள்ளது. என்பதனை,

தெண்கடல் வளாகம் பொதுமையின்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓடுராக் கும்மே
(அதனால்) செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்போம் எனினே தப்புந பலவே
(புறம். 189, 1 - 8)

எனும் பாடல் வரிகளில் வேடன் என்பவன் உணவு, உடை அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவனாக இருந்தான். வேடன் இரவில் வேட்டையாடித் திரும்பிய பின்

வீட்டு முற்றத்தில் கூடிய வேடர்களின் நடுவில் துடியன் என்பவன் தனது கருமையான கை சிவக்குமாறு துடிப்பறையை முழக்கினான். வேடர்கள் வேட்டையாடிக் கொண்டு வருவதை துடிப்பறை முழக்கி அறிவிக்கப் பட்டுள்ளது என்பதனை,

வில்உழுது உண்மார் நாப்பண் ஒல்லென
இழி பிறப் பாளன் கருங்கை சிவப்ப
வலி துரந்து சிலைக்கும் வன் கண் கடுந் துடி
(புறம். 170, 4 - 6)

என்ற அடிகள் வேடர்களின் வாழ்வியலைத் தெரிவிப்பவனாக திகழ்ந்திருக்கின்றன. காடு, மலைகளை வேட்டையாடிச் சீறூர் குடிசைகளில் வாழ்ந்து வேட்டையில் கிடைக்கும் மாமிசங்களை பாதீடு செய்து வேடர்கள் உண்பார்கள். வேடர்கள் மிகுந்த வீரம் மிக்கவர்களாக இருந்தார்கள். வேடர்களின் உருவத்தோற்றம் தன்மையினை பாடல்கள் எடுத்துரைக்கின்றன. இதனை,

கணைக்கால்
அவ்வயிற்று அகன்ற மார்பின் பைங்கண்
குச்சின் நிரைத்த குரூஉமயிர் மோவாய்
செவி இறந்து தாழ்தரும் கவுளன்
வில்லொடு,
யார்கொலோ, அளியன் தானே?
(புறம். 257, 1 - 5)

எனும் அடிகள் வேடர்கள் திரட்சியான கால் பகுதிகளைக் கொண்டுள்ளன. பருத்த வயிற்றினையும், அகன்ற மார்பினையும் கொண்டவன். பசுமையான கண்களையும், தருப்பைப் புல் போன்று நெருங்கிய மயிர்கள் முளைத்திருக்கும் முகத்தாடியினையும், செவியினையும் மறைத்து வளர்ந்த தலை முடியினையும் கொண்டவனாக இருப்பான் என்று இவ்வரிகள் விளக்குகின்றன. தமிழக மலை காட்டுப் பகுதிகளில் வறட்சியடைந்த குறிஞ்சி, முல்லை நிலங்கள் வேடர், எயினர், மழவர், மறவர் என்ற பெயர்களால் வேடர்கள் இனக்குழு வாழ்க்கை முறையில் வாழ்ந்து வந்ததைச் சங்க வாழ்க்கையையும் சங்க காலப்புலவர்கள் தங்களது சமகாலத்து நிகழ்வாக நோக்கி வறுமை, கொடுமை, களவு, மறம், முரட்டுபண்பு மற்றும் புலன்சார் வாழ்க்கையாக நன்மைகளுக்கு எதிரான தீமையாக மதிப்பீடு செய்துள்ளார்கள். சில புலவர்கள் இவர்களுடைய குழு வாழ்க்கையின் மனித இணக்கம், விருந்து பேணுதல், பகிர்ந்து உண்ணல், உடல் வலிமை, வீரம் வேந்தர்க்கு அஞ்சாமை, பாணர் இரவலரிடம் பரிவு என்று நேர்மறையாக மதிப்பீடு செய்து உள்ளார்கள். இம்மதிப்பீடுகளின் வழி சங்ககால மக்களின் ஆளுமை மட்டுமன்றி அவர்களின் வாழ்வியல் முறைகளும் பண்பாட்டு நிகழ்வுகளும் தெளிவாகின்றன.

குகை வாழ்க்கை முறை

பழங்கால மக்கள் காடுகளில் நாடோடிகளாக அலைந்த காலங்களில் உயர்ந்த மலைப்பகுதிகளிலும், மலைச் சரிவுகளிலும் வாழ்ந்து வந்தனர். கொடிய விலங்குளிடமிருந்தும் இயற்கையின் சீற்றங்களிடமிருந்தும் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு மலைக் குகைளிலும், பாறைகளின் இடுக்குகளிலும், மரப்பொந்துகளிலும் இருப்பிடங்களைஅமைத்துக் கொண்டனர். தொடக்க காலக் கட்டத்தில் ஆடைகளின்றித் திரிந்த இம்மக்கள் மரப்பட்டை, இலை, தழைகள், விலங்குளின் தோல்களை ஆடைகளாகப் பயன்படுத்தி குளிர், வெப்பம் ஆகியவற்றிலிருந்து பாதுகாத்துக் கொண்டுள்ளனர்.

குகைகளில் இருந்த மக்கள் வேட்டையாட முடியாத சூழ்நிலைகளில் பாறைகளில் கண்ணால் காண்கின்றவற்றை சித்திரமாக உருவாக்குகின்றன. இதனால் பாறை ஓவியங்கள் வளர்ந்திருக்கின்றன. விலங்குகளிடமிருந்து தங்களைப் பாதுகாக்க தன் கையினையே நம்பி வாழ்கின்றான். தன் கையே தனக்குதவி “எனும்” பழமொழிக்கு ஏற்ப தன்னுடைய விரலினால் பொருட்களைப் பற்றி பிடிக்கும் தன்மையினை உற்று நோக்கி

கற்கருவிகளையும், வில், அம்பு போன்ற கருவிகளையும் உருவாக்குகின்றான்.

இவ்வாறு, ஆதிமனிதன் வாழ்க்கை முறையினை தங்களின் பாறை ஓவியங்களின் மூலம் வெளிப்படுகின்றன. பாறைகளில் வேட்டையாடும் முறையும், வேட்டைக்கு பயன்படுத்திய கருவிகள், மக்களின் பழக்கவழக்கங்கள், சடங்கு முறைகளும் இந்த ஓவியங்களின் வாயிலாக வெளிப்படுகின்றன. நீலகிரி மாவட்ட இடுஹட்டி பாறைஓவியத்தில்வரையப்பட்டுள்ள சூரியன், சந்திரன், நிலா போன்ற ஓவியங்கள் நமது மூதாதையர் வானுலக வழிபாட்டினை கற்றாய்ந்து வழிபட்டதை எடுத்துக்காட்டுகின்றது.

தாம் இருந்த மலைக்குகைகளில் இவர்கள் விரல்களால் வரைந்த சித்தரங்களில் சில இன்னும் காணக்கிடக்கின்றன. இவர்கள் சிவப்பு கருநிறங்களில் மிருகங்களின் சித்திரங்கள் வரையத் தொடங்கினர். கலைஞன் முதலில் கோடுகளை வரைந்து பின்னர் அவற்றில் வர்ணத்தைத் தீட்டினான். கொஞ்சம் திறமை அடைந்த பின் கற்களிலும், எலும்புகளிலும் மரத்திலும் தனது கலையை வெளிப்படுத்தினான். அவர்கள் வரைந்த சித்திரங்களில் ரோமம் நிறைந்த காண்டாமிருகம் மான், காட்டுக் குதிரைகள் ஆகியவற்றின் உருவகங்கள் உள்ளன. இவ்வினத்தின் கடைசி காலப்பகுதியில் வில் அம்புகள் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிகிறது. அவர்களது குகைகளில் இருந்த எலும்புகளாலும், மற்றவைகளாலும் அவர்கள் பல தலைமுறைகளாக ஓரே இடத்தில் இருந்ததாகத் தெரிகிறதுஎன்று மனித சமுதாயம் (ப. 14) என்ற நூலில் ராகுல்சாங் கிருத்யாயன் கூறியுள்ளார்.

ஆதி விவசாயி

வேட்டை சமூகமாக இருந்த காலத்தில் ஆணுக்கு நிகராக பெண்களும் வேட்டைக்கு சென்றனர். பெண்கள் கருவுற்றிருந்த காலங்களில் ஓய்வில் இருப்பாள். அப்போது அதிகப்படியான பழங்களை உண்கின்றாள். அப்பழங்களின் விதைகளை கொல்லைப் புறத்தில் எறிகின்றாள். அவ்வாறு மண்ணில் விழுந்து புதைந்த விதை மழையில் முளைத்து துளிர்ப்பதைக் காண்கின்றாள். பின்னர் தானும் அதுப்போல் விதைகளை மண்ணில் விதைத்து முளைக்கச் செய்கின்றாள். இவ்வாறு பெண் ஆதிவிவசாயி ஆகின்றாள். வேட்டையில் ஆணுக்கு கிடைக்கும் உணவு நிச்சயமற்ற தன்மையாகின்றது. பெண்ணின் மூலமாக உணவுத்தேவை நிறைவடைகின்றது.

எனவே பெண் ஆதி விவசாயி ஆகின்றாள். பெண் கொண்ட சமூகம் உருவாக்கப்பட்டது. போர் நிகழ்வுகளில் தெய்வமாகப் போற்றப்படுபவள். கொற்றவை என்ற பெண் தெய்வம் ஆகும். கொற்றவையின் ஆயுதம் சூலமாகும். இது மூவிலை போன்ற வேல், இது திரிசூலமாகும். சூல் என்றால் விதை. ஒரு புத்துயிரை தன்னில் உள்ளடக்கி வைத் திருப்பவள் சூலி என்பவள் கருவுற்றிருக்கும் பெண். உயிர்த்தத்துவமுடையதாகமண்ணையும், பெண்ணையும் புரிந்து கொண்ட உணர்வானது ஒரு பெண் தலைமை சமூகத்தையும், உயிர் தத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்ட மண்ணும் பெண்ணும் சார்ந்த சமயக் கோட்பாட்டையும் கொண்டது ஆதி சமூகமாக அமைந்தது.

சூலாயுதம் ஆதி விவசாயின் உழவுக் கருவி. இது முல்லையும், குறிஞ்சியும் இவற்றால் ஆன பாலை நிலங்களுக்குரியது. கலப்பை கண்டுபிடிப்பே பயிர்த்தொழிலை மருதநிலத்திற்கு கொண்டு வந்தது. மருதம் என்ற ஒரு திணையின் உருவாக்கம் இங்கு நிகழ்கிறது. இங்குதான் ஆண் தலைமை சமூகத்தின் சாதனையைத் தொடங்குகின்றான்.

ஆண் தலைமை சமூகமாகத் தோற்றமளிக்கும் சமூகத்திலும் போர் தெய்வமாகப் பெண் தெய்வத்தை ஏற்றுத் தொடர்வது என்பது தமிழரின் ஆதி சமூக அமைப்பு பெண் தலைமை சமூகம் என்பதைத்தான்

உறுதிப்படுத்துகிறது. சமூகம் நாகரீக வளர்ச்சியில் முன்னோக்கிச் சென்றாலும் பண்பாடுகளில் சற்று பின்தங்கியே வந்துக் கொண்டிருக்கும். பெண்கள் தான் பண்பாட்டு வளர்ச்சியின் முன்னோடியாகத் திகழ்வாள். எனவே சங்க காலச் சமுதாயத்திலும் போர் தெய்வமாகக் கொற்றவை தொடர்கிறாள். இதனை,

> **பெருங்காட்டு கொற்றிக்குப் பேய் நொடித்தாங்கு**
> ***(கலி. 89, 8, 380)***
>
> **நெற்றி விழியா நிறை திலகம் இட்டாளே,**
> **கொற்றவை கோலம் கொண்டு, ஓர் பெண்**
> ***(பரி. 11, 99 - 100)***
>
> **விடர்முகை அடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்**
> **கடனும் பூணாம்; கைந்நூல் யாவாம்;**
> ***(குறு. 218, 1-2, 503)***

என்ற வரிகள் சான்றுபடுத்துகின்றன.

தாய்வழி சமூகம்

வேட்டை சமூகத்தில் தாய்வழியே தொடர்ந்து இருந்த காலத்தில், வேட்டைக்கு முன்னுள்ள சமுதாயத்தில் உற்பத்தி கிடையாது. இயற்கையாக கிடைக்கும் விதைகள், பழங்கள், காய்கள், வேர்கள், கிழங்குகள், சிறுபிராணிகள் ஆகியவை கிடைத்தவற்றைப் பகிர்ந்து கொண்டனர். வேலையினால் ஏற்படும் பிரிவின்மை இல்லை. பெண் உறவும், தாயன்பும் பெண்ணிற்கு முதலிடம் தந்தன. தொடக்க காலத்தில் பெண் பயிர்த்தொழிலை ஆரம்பித்ததால் பெண்ணிற்கு முதலிடம் அளிக்கப் பெற்றது. மழை வளம், சடங்குமுறைகளில் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

தாய்வழி மாற்றம் ஏற்படும் முறை

மனிதன் உயிருடன் பிடித்த விலங்கினங்களில் தனக்குப் பயன்படும் இனங்களை மட்டும் கண்டு தேர்ந்து தோழனாகப் பழக்கி அவற்றினை இனவிருத்தி செய்து பெருக வழி செய்தான். இதன் வாயிலாக கால்நடைகளை மேய்க்கும். நாடோடி வாழ்க்கை முறை அமைந்தது. அதன் பின்பு ஆண் வேட்டையாடவும் பெண்கள் இயற்கையாக கிடைக்கும் பொருட்களையும் சேகரித்தனர். இயற்கையாக கிடைக்கும் உணவுப் பொருட்களை சேகரிப்பது சுலபமாக இருந்ததால் பெண்கள் அக்கடமையைச் செய்தனர். இதனால் வேட்டைக்குச் செல்லும் நேரங்களில் பெண்ணை அழைத்து செல்வதை தவிர்க்க வேண்டியச் சூழ்நிலை மனிதனுக்கு ஏற்பட்டது. பெண்கள் கருவுற்றிருக்கும் காலங்களிலும், உடல்நிலை சரியில்லாத காலங்களில் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்வதற்கு சிரமமாக இருந்தது. எனவே நாடோடியாக வாழ்ந்தவன் மனைவி மற்றும் குழந்தைகளை நீர்வளமுள்ள ஆற்றோரங்களில் மேட்டுப் பகுதியில் குடியிருப்புகளை ஏற்படுத்தி தங்கள் குடும்பங்களை தங்க வைத்து அவனது பணியினைச் செய்ய சென்று வந்தான்.

பின்பு எளிய முறை வேளாண்மையை பெண்கள் கண்டறிந்து செயல்பட்டதால் கற்களாலோ, குச்சிகளாலோ நிலத்தை கீறல் முறையில் பயிரிட்டனர். பின்னர் கலப்பையின் பயன்படும், விலங்குளின் பயன்பாடும் உழுதொழிலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதால் பெண்களின் பங்களிப்புகுறைவாகவே இருந்தன. ஆணின் அதிகப்படியான உழைப்பு வெளிப்படும் போது பெண்ணின் தலைமைப் பண்பு குறையத் தொடங்குகிறது. வாழ்க்கைத் தேவைகளைச் சம்பாதிப்பதில் ஆண், பெண்ணை விடத் தான் திறமையுள்ளவன் என்பதை நிரூபித்த போது, சமுதாயத்தில் தனது தனிப்பட்ட சிறப்பை நிலைநாட்டு வதில் வெற்றி பெற்ற போது, பெண்ணின் அதிகாரம் வீழ்ச்சியடையத் தொடங்குகிறது என்பதனை மனித சமுதாயம் என்னும் நூல் (ப.எ. 31) எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

முடிவுரை

ஆதிகால மனிதன் முன்னெடுத்து சென்ற வளர்ச்சி நிலையின் அடிப்படையே இன்றைய நாகரீக வளர்ச்சி நிலையாகும். முதல் விவசாயம் தோன்றுவதற்கு பெண் முக்கிய பங்கு வகிக்கின்றாள். உணவுக்காக அலைந்த நிலையிலிருந்து உணவு உற்பத்தி செய்யும் நிலையாக வேளாண்மை வளர்ச்சியடைந்து காணப்படுகிறது.

துணைநூற்பட்டியல்

1. சுப்பிரமணியன், பே, புறநானூறு (மூலமும் உரையும்), நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்பி. லிட்., 41-பிசிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை முதற்பதிப்பு- 2004.
2. சுப்பிரமணியன், பே, பரிபாடல் (மூலமும் உரையும்), நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பி. லிட்., 41-பிசிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை, முதற்பதிப்பு - 2004.
3. நாகராஜன், வி, குறுந்தொகை (மூலமும் உரையும்), நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பி. லிட்., 41-பிசிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை, முதற்பதிப்பு- 2004.
4. விசுவநாதன், அ, கலித்தொகை (மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்பி. லிட்., 41-பிசிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை, முதற்பதிப்பு- 2004.
5. தனஞ்செயன், ஆ, தமிழ் இலக்கிய மானிடவியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில் நுட்ப பயிலக வளாகம், தரமணி, சென்னை, முதற்பதிப்பு - 2011.
6. தேவநேயப் பாவாணர், ஞா, பண்டைத் தமிழ் நாகரீகம் பண்பாடும், நேசெண்பகா பதிப்பகம், 32-பி, கிருஷ்ணா தெரு, பாண்டிபஜார், சென்னை.
7. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், நெய்யப்பன்பதிப்பகம், 53, புதுத்தெரு, சிதம்பரம், முதற்பதிப்பு - 1990.
8. பக்தவத்சல பாரதி, தமிழர் மானிடவியல், த.பாபிரஸ், அச்சகம், மணிஆப்செட், சென்னை, அடையாளம், 1205/ கருப்பூர்சாலை, புத்தாநத்தம், திருச்சி மாவட்டம், இரண்டாம்பதிப்பு - 2008.